# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.24/2025

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | கண்ணம்மாள் |
| Father's Name | : | முத்தையா |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 1ம் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 15.11.2024 தேதியில் 1ம் வாதியின் கணவர் முத்தையா இறப்புசான்று கணினி வழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 29.04.2024 தேதியில் 1ம் வாதி வாரிசுசான்று கோரி 2ம் பிரதிவாதியிடம் கொடுத்த வாரிசு சான்று மனுவை நிராகரித்து 2ம் பிரதிவாதி வழங்கிய உத்தரவு கணினி வழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 1ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 2ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 3ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 1ம் வாதியின் கணவர் முத்தையா ரயில்வேயில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின் அவருக்கான ஓய்வூதிய உத்தரவு அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 10.11.1993 தேதியில் 1ம் வாதிக்கும், அவரது கணவர் முத்தையாவுக்கும் நடந்த திருமணத்தின்போது அச்சடித்த திருமணப்பத்திரிக்கை அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 1ம் வாதியின் கணவர் ரயில்வேயில் பணிபுரிந்த அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 09.07.1992 தேதியில் 1ம் வாதியின் கணவர் லேட்.முத்தையாவின் முதல் மனைவி மோகனம்மாள் இறப்பு சான்று கணினி வழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 1ம் வாதியின் கணவர் முத்தையாவின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**